1982 பிப்ரவரி 2]

குஜிலியம் பாறையில் ஒன்றியப் பணியாளர்களுக்கான வீடு கட்டும் திட்டம்.

*வினா எண் 12—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேடசந்தூர் தொகுதி குஜிலியம்பாறையில் ஒன்றிய பணியாளர்களுக்கென வீடு கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் வீடு கட்டும் பணி எப்போது துவங்கப் படும் ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தப் பணிக்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு? எப்போது இத்திட்டம் முடிவு அடையும்? இதுபோன்ற பணிகள் தமிழகத்திலே எத்தனை ஊராட்சி ஒன்றியங்களிலே செயல் படுத்தப்படுகின்றன என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : 1981-82 ஆம் ஆண்டின் இரண்டாவது பகுதித் திட்டத்தில் 20 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன. இதற்காக சுமார் 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் சுகாதார உதவியாளர்கள்

*வினா எண். 13—திரு மு. அப்பாதுரை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் சுகாதார உதவியாளராக பணிபுரிவோர் தொழில் முறையில் மருத்துவராலும் நிர்வாகத் துறையால் ஆணையாளராலும் ஆட்படுத்தப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவர அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அல்லது மாவட்ட சுகாதார அலுவலர் இவர்களில் ஒருவருடைய முழு கட்டுப்பாட்டில் கொண்டு வருவது சாத்தியமில்லை.